உ

# பாம்பாட்டிசித்தர்

## பாடல்



பிரசுரித்தவர் :

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

4, வெங்கட்ராமய்யர் தெரு,

)தன் விலை]    சென்னை-1.    [பைசா 35.

கடவுள் துணை

# பாம்பாட்டி சித்தர் பாடல்

---

## கடவுள் வணக்கம்

தெளிந்துதெளிந்துதெளிந் தாடுபாம்பே-சிவன்
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே
ஆடுபாம்பேதெளிந் தாடுபாம்பே-சிவன்
அடியிணைக்கண்டோமென் றாடுபாம்பே. 1

நீடுபதநமக்கென் றுஞ் சொந்தமென்றே
நித்தியமென்றபெரு முத்தியென்றே
பாடுபடும்போதிமாதி பதிநினைந்தே
பன்னிப்பன்னிபாவிநின் றாடுபாம்பே, 2

பொன்றிலொளிபோலவெங்குப் பூரணமதாய்
பூவின்மணம்போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பலவுயிர்களின் மன்னிப்பொருந்தும்
வள்ளலடிவணங்கிநின் றாடுபாம்பே. 3

எள்ளிலெண்ணெய்போலவுயி ரெங்கும்நிறைந்த
ஈசன்பதவாசமல ரெண்ணியெண்ணியே
உள்ளபடியானபத்தி யோங்கி நிற்கவே
ஒடுங்கியடங்கித்தெளிந் தாடுபாம்பே. 4

அண்டபிண்டந்தந்தவெங்க ளாதிதேவனை
அகலாமலேநினைத் தன்புடனேபணிந்
தெண்டிசையும்புகழ்ந்திட வேத்தியேத்தி.
ஏகமனமாகநாடி யாடுபாம்பே. 5

சோதிமயமானபரி சுத்தவஸ்துவைத்
தொழுதழுதாவலறித் தோந்தோமெனவே
நீதிதவறுவழியினின்று நிலையாய்
நினைந்து நினைந்துருகி யாடுபாம்பே. 6

அருவாயுமுருவாயு மாதியாயும்
அந்தமாயுமொளியாயு மாகமமாயும்
திருவாயுங்குருவாயுஞ் சீவனாயும்
செறிந்தவஸ்துவைப்போற்றி யாடுபாம்பே. 7

கட்டிக்காட்டவொண்ணாத பாழ்வெளியந்தனைச்
சூட்சமதியாலறிந்து தோஷமறவே
எட்டிப்பிடித்தோமென்று னந்தப்பாம்பை
யெடுத்துவிரித்து நின்றுடுபாம்பே. 8

எவ்வுயிருமெவ்வுலகு மீன்றுப்பறப்பாய்
இருந்துதிருவிளையாட் டெய்தியும்பின்னர்
அவ்வுயிருமவ்வுலகு மாகியுநின்ற
ஆனந்தவெள்ளங்கண் டாடுபாம்பே. 9

குரு வணக்கம்

சாற்றுமுடல்பொருளாவி தத்தமாகவே
தானர்வாங்கிநின்றவெங்கள் சற்குருவினைப்
போற்றிமனம்வாக்குக்காய மூன்றுமபொருந்தப்
புகழ்ந்துபுகழ்ந்து நின்றுடாய்பாம்பே. 10

பொய்மதங்கள்போதனைசெய் பொய்குருக்களைப்
புத்திசொல்லி தன்னெறியிற் போகவிடுக்கும்
மெய்மதத்தானின்னதென்று மேவவிளம்பும்
மெய்க்குருவின்பதம்போற்றி யாடாய்பாம்பே. 11

வேதப்பொருளின்னதென்று வேதங்கடந்து
மெய்ப்பொருளைக்கண்டுமன மேவிவிரும்பிப்

போதப்பொருளின்னதென்று போதனைசெய்யுப்
பூரண சற்குருதாள்கண் டாடாய்பாம்பே. 12

உள்ளங்கையிற்கனிபோல வுள்ளபொருளை
உண்மையுடன் காட்டவல்ல வுண்மைக்குருவைக்
கள்ளமனந்தன்னைத் தள்ளிக்கண்டுகொண்டன்
களித்துக்களித்து நின்றாடுபாம்பே. [பாய்

அங்கையிற்கண்ணாடிபோல வாதிவஸ்துவை
அறிவிக்குமெங்களுயி ரானகுருவைச்
சங்கையறச்சந்ததமுந் தாழ்ந்துபணிந்தே
தமனியப்படமெடுத் தாடாய்பாம்பே. 14

காயநிலையழிகையைக் கண்டுகொண்டபின்
கற்புநிலையுள்ளிற்கொண்டெக் காலமும்வாழும்
தூயநிலைக்கண்டபரி சுத்தகுருவின்
துணையடிதொழுது நின்றாடாய்பாம்பே. 15

கூடுவிட்டுக்கூடுபாயுங் கொள்கையுடைய
குருவின்வல்லமையெவர் கூறவல்லவர்
வீடுபெறும்வகையை மேன்மேலுங்காட்டும்
மெய்க்குருவைப்பணிந்து நின்றாடுபாம்பே. 16

அட்டதிக்குமண்டவெளி யானவிடமும்
அடக்கியகுளிகைபோ டாடிவிரைவாய்
வட்டமிட்டுவலம்வரும் வல்லகுருவின்
மலரடிதஞ்சமென் றாடாய்பாம்பே. 17

கற்பகாலங்கடந்தாதி கர்த்தாவோடுங்
கடமழியாதுவாழுங் காரணக்குரு
பொற்பதமேதஞ்சமென்று போற்றுதல்செய்து
பூரணசிந்தையோ டாடாய்பாம்பே. 18

வச்சிரத்தாற்கோற்புழு வாய்க்குமாயினும்
வல்லுடம்புக்கோற்குறை வாய்த்திடாது
மெச்சகடமுள்ளவெங்கள் வேதகுருவின்
மெல்லடி துதித்து நின் றாடாய்பாம்பே. 19

நாதர்முடிமேலிருக்கும் நாகப்பாம்பே
நச்சுப்பையைவைத்திருக்கும் நல்லபாம்பே
பாதளத்தில்குடிபுகும் பைக்கொள்பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே. 20

வளைபுகும்போதேதலை வாங்கும்பாம்பே
மண்டலமிட்டுடல்வளை வண்ணப்பாம்பே
தடைக்கஞ்சி நின்றிடும் சத்திப்பாம்பே
தலையெடுத்தேவிளை யாடுபாம்பே. 21

குற்றமற்றசிவனுக்கு குண்டலமானாய்
கூறுந்திருமாலினுக்கு குடையானாய்
கற்றைகுழற்பார்வதிக்குக் கங்கணமானாய்
கரவாமலுள்ளங்களித் தாடுபாம்பே. 22

மண்டலத்தைத்தாங்குமிக வல்லமைகொண்டாய்
மாயனுக்குப்படுக்கைக்கு வண்ணப்பாயானாய்
கண்டபடைநடுங்கிடக் காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவியாகக்கொண் டாடுபாம்பே. 23

சந்திரசூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக்காபரணந் தானுமானாய்
மந்திரத்தாற்கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்துவளைந்து நின் றாடுபாம்பே. 24

சித்தர் வல்லபங் கூறல்

எட்டுநாகந்தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனுலகத்தை யிங்கேகாட்டுவோம்

கட்டுக்கடங்காத பாம்பை கட்டிவிடுவோம்
கடுவிஷந்தன்னைக்கக்கி யாடுபாம்பே. 25

ஆதிசேடனாகினுமெங்கள் கையினாலே
ஆட்டிவிடுவோமெங்க ளாக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியே நின்றாடச்செய்வோம்
நின்றநிலைதவறாம லாடுபாம்பே, 26

ஆனைச்சிறு துரும்பாகத் தோன்றிடச்செய்வோம்
துரும்பைபெருந் தூணாக தோற்றச்செய்வோம்[ம்
ஆணைப்பெண் ணும் பெண்ணையா ணுமாகச்செய்
ஆரவாரித்தெதிராய்நின் றாடுபாம்பே. [வோம்

எட்டுமலைகளைப்பந்தா யெடுத்தெறிவோம்
எழுகடலையுங்குடித் தேப்பமிடுவோம்
மட்டுபடாமணலையு மதித்திடுவோம்
மகாராஜன்முன்னே நின் றாடுபாம்பே. 28

மண்டலமூற்றுங்கைபோல் மறைத்திடுவோம்
விர்னத்தையும்வில்லாக வளைத்திடுவோம்
தொண்டருக்குச்சூனியஞ் சொல்லிகாட்டுவோம்
தோன்றலுக்குமுன்புநின் றாடுபாம்பே. 29

மூண்டெரியுமக்கினிக்குள் மூழ்கிவருவோம்
மூந்நீருள்ளிருப்பினு மூச்சடக்குவோம்
தாண்டிவரும்வண்புலியைத் தாக்கிடுவோம்
தார்வேந்தர்முன் நின் றாடுபாம்பே. 30

செப்பரியமூன்றுலகஞ் செம்பொன்னாக்குவோம்
செங்கதிரைத்தண்கதிராய்ச் செய்துவிடுவோம்
இப்பெரியவுலகத்தை இல்லாமற்செய்வோம்
எங்கள்வல்லபங்கண் டாடுபாம்பே, 31

வேதன் செய்தசிருஷ்டிகள் போல்வேறுசெய்வோ
வேதனையுமெங்கள்கீழே மேவச்செய்வோம் [ம்
தாதனுடன் சமமாக நாங்களும்வாழ்வோம்
எங்கள் செய்கையிதுவென் றூடாய்பாம்பே. 32

அறுபத்துநாலுகலை யாவுமறிந்தோம்
அதற்குமேலொருகலை யானதறிந்தோம்
மறுபற்றுசற்றுமில்லா மனமுமுடையோம்
மன்னனேயாசானென் றூடுபாம்பே. 33

சிறுபுலியானையாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குற்றேவல் செய்யச்சொல்லுவோம்
வீறுபெறுங்கடவுளை யெங்களுடனே
விளையாடச்செய்வோமென் றூடாய்பாம்பே. 34

சித்தர் சம்வாதம்

வாசுகியையொருபக்க மன்ன நிறுத்தி
மகத்தானபதுமனை மறுபக்கம்வைத்து
தேசுலவுதக்கனைத்தன் றிக்கிற்சேர்த்துச்
செய்யபதுமனைக்கொள்ளும் சித்தனாரோ. 35

அனந்தனையொருபக்க மாகநிறுத்தி
அதன்பக்கங்குளிகனை யண்டச்சேர்த்து
கனங்கொண்டகார்க்கோடகன் காணக்காட்டுங்
கடுஞ்சங்கபாலனைத்தான் சித்தனாரோ. 36

அட்டதிக்குஞ்சக்கரங்க ளாகக்கீறி
அக்கோண நிலைகளி லக்கரஞ்சேர்த்து
திட்டமுடன்மந்திரத்தைச் செபித்து நில்லு
சித்தர்தடுமாறுதே சித்தனாரோ. 37

அட்டதிக்குஞ்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
அவ்வவற்றிற்சக்கரங்க ளமைத்துவிட்டோம்

எட்டுநாகமிருக்கின்ற விடத்தில்விட்டோம்
இனியென்னசெய்வதுசொல் சித்தனே. 38

நடுவாகவாதிசேடன் றன்னை நாட்டு
நான்குதிக்கும்மந்திரித்த நீறுதூவு.
கடுவிஷங்கக்கவே கட்செவிகளைக்
கையிலெடுத்தாட்டுங்கள் சித்தனே. 39

பொருளாசை விலக்கல்

நாடுநகர்வீடுமாடு நற்பொருளெல்லாம்
நடுவன்வரும்பொழுது நாடிவருமோ
கூடுபோனபின்பவற்றாற் கொள்பயனென்னே
கூத்தன்பதங்குறித்து நின் றாடாய்பாம்பே. 40

யானைசேனைதேர்ப்பரி யாவுமணியாய்
யமன்வரும்போது துணையாமோவறியாய்
ஞானஞ்சற்றுமில்லாத நாய்கட்குப்புத்தி
நாடிவரும்படி நின் றாடுபாம்பே. 41

மாணிக்கமாமணிமுடி வாகுவலயம்
மார்பிற்றொங்கும்பதக்கங்கள் மற்றும்பணிகள்
ஆணிப்பொன்முத்தாரம்பொன் தந்தக்கடகம்
அழிவானபொருளென நின் றாடாய்பாம்பே. 42

மாடகூடமாளிகைகள் வண்ணமண்டபம்
மதில்சூழ்ந்தவாண்மனை மற்றுமுள்ளவை
கூடவாராதென்றவந்தக் கொள்கையறிந்தோர்
குறவாமல்வெறுப்பாரென் றாடாய்பாம்பே. 43

மலைபோன்றசெப்பொற்குவை வைத்திருப்பவர்
மறலிதான்வருகையில் வாரிச்செல்வாரோ
அலையாமலகத்தினை யத்தன்பால்வைத்தோர்
அழியாரென்றேதுணிந் தாடாய்பாம்பே, 44

பஞ்சணையும்பூவணையும் பாயலும்வெறும்
பாழ்சுடுகாடதனிலே பயன்பெறுமோ
மஞ்சள்மணல்போல்சுடு நறுமணங்கள்
வருமென்றுதெளிந்து நின் றாடாய்பாம்பே. 45

மூக்கனியுஞ்சர்க்கரையு மோதகங்களும்
முதிர்சுவைபண்டங்களு முந்தியுண்டவாய்
மிக்கவுயிர்ப்போனபின்பு கண்ணைவிழுங்க
மெய்யாகக்கண்டோமென் றாடாய்பாம்பே. 46

வண்ணப்பட்டுவாசனையும் வாய்த்தகோலமும்
வண்கவிகையாலவட்ட மற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன்யமபுரஞ் செல்லுங்காலத்தில்
சேரவேமாட்டாதென் றாடாய்பாம்பே. 47

மக்கள்பெண்டீர்சுற்றமரு மக்கள்மற்றவர்
மாளும்போதுகூடவவர் மாள்வதில்லை
தக்கவுலகனைத்தையுந் தந்தகர்த்தனைத்
நாவித்தாவித்துதித்து நின் றாடாய்பாம்பே 48

கானலைமானீரெனவே கண்டுசொல்லல்போல்
காசினிவாழ்வினைமூடர் கண்டுகளிப்பர்
மேனிலைகண்டார்கள்வீணாய் வீம்புபேசிடார்
மெய்யன்பதனுடுவாரென் றாடாய்பாம்பே. 48

பெண்ணாசை விலக்கல்

வெயில்கண்டமஞ்சள்போன்ற மாதராசை
விரும்பியேமேல்விழுந்து மேவுமாந்தர்
ஒயில்கண்டஇலவுகாத் தோடுங்கிளிபோல்
உடல்போனாலோடுவரென் றாடாய்பாம்பே. 50

செண்டுமுலைவண்டுவிழி கொண்டதோகையைச்
சித்தப்பாய்பால்விழுங்கியே சீயென்றெரித்தோம்

குண்டுகட்டெருமையேறுங் கூற்றப்பார்வையைக்
கொன்றுதின்றுவிட்டோமென் றாடாய்பாம்பே.

வட்ட முலையென்றுமிக வற்றுந்தோலை
மக்மேருவென்றுவமை வைத்துக்கூறுவர்
கெட்டநாற்றமுள்ளயோனிக் கேணியில்விழுந்தார்
கெடுவாரென்றேதுணிந் தாடாய்பாம்பே. 52

மலஞ்சொரிகண்ணைவடி வாளுக்கொப்பாக
வருணித்துச்சொல்வர்மதி வண்மையில்லாதவர்
குலநலம்பேசுகின்ற கூகைமாந்தர்கள்
கும்பிக்கேயிரையென் றாடாய்பாம்பே. 53

சிக்குநாருகூந்தலைச் செழுமேகமாய் [தாய்
செப்புவார்கள்கொங்கைதனைச் செப்புக்கொப்ப
நெக்குநெக்குருகிப்பெண்ணை நெஞ்சில் நினைப்பார்
நிமலனை நினையாரென் றாடாய்பாம்பே. 54

நாறிவருமெச்சிறனை நல்லமுதென்று
நண்ணுஞ்சளிநாசிதனை நற்குமிழென்று
கூறுவார்கள்புத்தியில்லாக் கூகைமாந்தர்
கோதிலையையரியாரென் றாடாய்பாம்பே. 55

மயிலென்றுங்குயிலென்றும் மாணிக்கமென்றும்
மானேயென்றுந்தேனேயென்றும் வானமுதென்
ஒயிலானவன்னமிற்கொத்தவளென்றும் [றும்
ஓதாமற்கடித்துவிட் டாடுபாம்பே. 56

மின்னற்கொடியென்றுஞ் சோதிவிளக்கமென்றும்
மெல்லியென்றுவல்லியென்றும் மேனகையென்றும்
கன்னக்கட்டியென்றும் சீனிசற்கண்டென்றும்
கழறுமற்கடித்தோமென் றாடாய்பாம்பே. 57

பூவையென்றும் பாவையென்றும் பொன்னே
யென்றும் பூந்திருவே யென்றுமென்றன் பொக்
கிஷமென்றும், கோவையென்றுங் கோதையென்
றுங் கோகிலமென்றும், கூறுமற்றுறந்தோமென்
றூடாய்பாம்பே. 58

மலக்குடம்மீதினிலே மஞ்சள்பூச்சென்றும் [றும்
மல்கும்புழுக்கூட்டின்மேல் வண்ணத்தோலென்
சலக்குழிக்குள்ளேநாற்றஞ் சார்ந்தசேறென்றும்
தானறிந்துதள்ளினேமென் றூடாய்பாம்பே. 59

சரீரத்தின் குணம்

ஊத்தைக்குழியிலே மண்ணையெடுத்தே
உதிரப்புனலிலே யுண்டைசேர்த்தே
வாய்த்தகுயவனார் மண்ணுப்பாண்டம்
வரவோட்டுக்குமாகாதென் றூடாய்பாம்பே. 60

இருவர்மண்சேர்த்திட வொருவர்பண்ண
ஈரைந்துமாதமாய் வைத்தகுலை
அருமையாயிருப்பினு மந்தக்குலை
அரைக்காசுக்காகதென் றூடாய்பாம்பே. 61

பரியாசம்போலவே கடித்தபாம்பு
பலபோறியவே மெத்தவீங்கிப்
பரியாரமொருமாது பார்த்தபோது
பையோடேகழன்றதென் றூடாய்பாம்பே. 62

சீழுமலமுஞ்செந் நீருநிணமுஞ்
சேர்த்திடுநாற்றக் குடமுடைந்தால்
நாயுநரியும் பேயுங்கழுகும்
நமதென்றே தின்னுமென்றூடாய் பாம்பே. 63

நீரிலே நீர்க்குமிழி நிலைகள்போலே
நில்லாவுடல் நீங்கிவிடும் நிச்சயமென்றே
பாரிற்பலவுயிர்களைப் படைத்தவன்றனைப்
பற்றவேபற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே. 64

நாறுமீனப்பலதரம் நல்லதண்ணீரால்
நாளுங்கழுவினுமத னாற்றம்போமோ
கூறுமுடல்பலதினி யாடிக்கொண்டதால்
கொண்டமலம்நீங்காதென் றாடாய்பாம்பே. 65

காய்த்தமரமிகுமிக்க கல்லடிபடும்
கன்மவினைகொண்டகாயங் கண்டனைபெறும்
வாய்த்ததவமுடையவர் வாழ்பவரென்றே
வல்லதுத்திருவடிதொழு தாடாய்பாம்பே. 66

பேசரியநவவாயிற் பீறற்றுருத்தி
பெருங்காற்றுக்குள்புகுந்தார் பேச்சுண்டாச்சே
ஈசனிலையறியாருக் கிந்தத்துருத்தி
எரிமண்ணிற்கிரையென் றாடாய்பாம்பே. 67

மரப்பாவைபோல்வொரு மண்ணுருச்செய்து
வளமானசீவனென்னுஞ் சூத்திரமாட்டித்
திரைக்குள்ளிருந்தசைப்போன் றீர்ந்தபொழுதே
தேகம்விழுமென்றுதெளிந் தாடுப்பாம்பே. 68

தசநாடிதசவாயு சத்ததாது
சார்ந்தமரக்கப்பலது தத்திவிழுமே
இசைவானகப்பலினை யேகவெள்ளததில்
என்னாளுமோட்டத்துணிந் தாடாய்பாம்பே. 69

அகப்பற்று நீக்கல்

தாமரையிலேலே தண்ணீர் தங்காத
தன்மைபோலச்சகத்தாசை தள்ளிவிட்டெங்கும்

ஆயமணியாய்விளங்கிய சோதிபதத்தைத்
தொழுதுதொழுதுதொழு தாடாய்பாம்பே. 70

கள்ளங்கொலைகாமாதி கண்டித்தவெல்லாம்
கட்டறுத்துவிட்டுஞானக் கண்ணைத்திறந்து
தெள்ளிதான்வெட்டவெளி சிற்சொரூபத்தைத்
தேர்ந்துபார்த்துச்சிந்தைதெளிந் தாடாய்பாம்பே

சொல்லும்புளியம்பழத்தி னோடுபோலவே
சுற்றத்திருந்தாலுமவர் தொந்தங்களற்று
நில்லுமனமேநீபர நின்மலத்திலே
நின்றுனைதான் வெறும்பாழென் றாடாய்பாம்பே.

சேற்றிற்றிரிபிள்ளைப்பூச்சி சேற்றைநீக்கல்போல்
தேசத்தோடொத்துவாழ்பவரைச் செய்கைகண்
சாற்றுபரவெளிதனைச் சாரும்வழியே [டபின்
தானடக்கவேணுமென் றாடாய்பாம்பே. 73

எண்ணைக்குந்தண்ணீர்க்குந் தொந்தமில்லாவா
எப்பொதும்புவியி லெய்தவேண்டும் [றுபோல்
கண்ணுக்கு கண்ணனவொளி கண்டுகொள்ளவே
கட்டறுத்துவாழ்ந்திட நின் றுடுபேர்ம்பே. 74

மக்கிவிட்டசோறுக்கறி கந்தமூலங்கள்
கண்களுக்குகத்தமான காட்சிபோலவே
சிக்கிக்கொண்டசக்தினைச் சியென்றெருத்துச்
சீர்பாதங்காண்த்தெளித் தாடாய்பாம்பே. 75

கோபமெனுமதயானை கொண்டுமதத்தை
கூர்கொள்புத்தியங்குசத்தாற் கொன்றுவிட்டோ
தீபமெனுஞ்சிற்சொருப செய்பொருளைச்[ங்காண்
சேர்ந்துறவுகொண்டோமென் றாடாய்பாம்பே.76

நித்தியமென் றுமலேயி னின் றுகொண்டோம்யாம்
நினைத்தபடி முடித்து நின் மலமானோம்
சத்தியமாயெங்கள்சடந்தா னழியாதே
சந்ததமும் வாழ்வோமென் றாடாய்பாம்பே. 77

மனமென்னுங்குதிரையை வாகனமாக்கி
மதியென்னுங்கடிவாளம் வாயிற்பூட்டிச்
சினமென்னுஞ்சேணிமேற் சீராயேறித்
தெளிவிடச்சாரிவிட் டாடாய்பாம்பே. 78

ஆசையென்னுஞ் செருப்பின்மேலடியைவைத்
ஆங்காரமுட்காட்டை யவமிதித்தே [தே
காசையெனுந்துற்குணத்திற் கனல்கொளுத்திக்
காலாகாலங்கடந்தோமென் றாடாய்பாம்பே. 79

காலனெனுங்கொடிதான் கடும்பகையைக்
கற்பமெனும்வாளினூற் கடிந்துவிட்டோம்
தாலப்பிறப்பினைத் தான்கடந்தோம்
தற்பரங்கண்டோமென் றாடாய்பாம்பே. 80

தேனில்விழுந்தயீயைப்போலச் சிந்தைகுலைந்து
திகையாமற்சொரூப தெரிசனைக்கண்டு
வானிற்பறந்திடச்சூத வானமதிர்த்து
வாயிற்போட்டேகதின் றாடாய்பாம்பே. 81

துக்கியபாதங்கண்டேன் சோதிகண்டேன்
சுத்தவெளிக்குள்ளேயொரு கூத்தனைகண்டேன்
தாக்கியசிரசின்மேல் வைத்தபாதம்
சற்குருவின்பாதமென் றாடாய்பாம்பே. 82

ஆலடிப்பொந்திலே வாழ்ந்தபாம்பே
அரசடிபொந்திலே புகுந்துகொண்டாய்

வாலடிதன்னிலே பார்த்துபார்த்து
வாங்கியேதூக்கி நின் றாடாய்பாம்பே. 83

நாலுதெருவிலே நாலுகப்பம்
நடுத்தெருவிலே பொன்கம்பம்
போலும்விளங்குபொன் கம்பத்தினுக்கே
பூமாலைசூட்டி நின் றாடாய்பாம்பே. 84

ஆழிபெயர்ந்தாலுமேரு மட்டேயலையும்
அடியோடுபெயர்ந்தாலு மன்றிக்கால
ஊருபெயர்ந்தாலுமாதி யுண்மைப்படிக்கே
உறுதிபெறுது நின் றாடாய்பாம்பே. 85

வாயுவினையிலையாக வாங்கியுண்டே
வடிக்குநீரினைவா யுண்மடுத்தே
தேயுபிறைகுளிர்காய்ந்து வெட்டவெளியிலே
திகைப்பறச்சேர்ந்து நின் றாடாய்பாம்பே. 96

மாசில்கதிவளையிலே மண்டலமிட்டே
மதியானபெருபட மடல்விரித்தே
ஆசில்பராபரமான வாதிபதத்தை
அடுத்தடுத்தேதுதித் தாடாய்பாம்பே. 87

காடுமலைநதிபதி காசிமுதலாய்க்
கால்கடுக்கவோடிற்பலன் காணலாகுமோ
வீடுபெறும்வழிநிலை மேவிக்கொள்ளவே
வேதாந்தத்துறையினின் றாடாய்பாம்பே. 88

எள்ளளவும்அன்பகத்தி லில்லாதார்முத்தி
எய்துவதுதெ ல்லுலகி லில்லையெனவே
கள்ளப்புலன்கட்டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழுதேகளித் தாடாய்பாம்பே. 89

சூரியனைக்கண்ட பனி தூரவோடல்போல்
சொந்தபந்தஞ்சித்தபரி சுத்தநலத்தில்
ஆரியனைக்கண்டுதரி சித்தேயன்புடன்
அகலாமற்பற்றிதொடர்ந் தாடாய்பாம்பே. 90

காந்தப்வலியிரும்புபோல் மாசின்மனதைக்
காட்சியானவல்லதவுடன் கலக்கச்சேர்த்துச்
சாந்தமுடன்றேண்டியின் தாம்புபோலச்
சலியாமற்றொடர்ந்து நின் றா ாய்பாம்பே. 91

உளியிட்டகற்சிலையி லுண்டோபலன்கள்
உலகத்தின்மூடர்களுக் குண்டோவுணர்ச்சி
புளியிட்ட செம்பிற்குற்றம் போமோவஞ்ஞானம்
போகாதமூடர்க்கென் றாடாய்பாம்பே. 92

திரளானபோரிலூசி தேடல்போன்முத்தி
சிக்காதுதேசாசார தேசிகர்தம்மால்
அருளானமூலகுரு வையர்செயலால்
ஆனந்தங்கண்டோமென் றாடாய்பாம்பே. 93

ஏட்டுச்சுரக்காய்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைதிரிந்துங்கதி யெய்தலில்லையே
நாட்டுக்கொருகோயிற்கட்டி னானும் பூசித்தே
நாதன்பாதங்காணார்களென் றாடாய்பாம்பே. 94

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறப்பார்
தன்னையறியாதவரே தன்னை காட்டுவார்
பின்னையொருகடவுளைப் பேணநினையார்
பேரொளியைப்பேணுவாரேன் றாடாய்பாம்பே

பாலிற்சுவைபோலுமெங்கும் சார்ந்தொளியைப்
பற்றுப்பொன்பற்றவைத்த பான்மைபோலே

காலில்சுழிமுனை நின்று கண்டுகொண்டு
களித்துகளித்து நின் றாடாய்பாம்பே. 96

தேக்கெடுத்தேயோடும்வானத் தேனையுண்டபின்
தேகபந்தங்கொண்டவமித் தேசவாழ்வினை
ஒக்காளமென்றெண்ணி யோலைசயுடனீ
உள்ளந்தெளிந்து நின் றாடாய்பாம்பே. 97

சதுர்வேதமாறுவகை சாஸ்திரம்பல
தந்திரம்புராணங்களை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேத நூல்களும்
வீணான நூல்களென் றாடாய்பாம்பே. 98

சமயபேதம்பலவான சாதிபேதங்கள்
சுகத்தோர்க்கேயல்லாதுசற் சாதுக்களுக்கோ
சிவமதத்திலேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித்தாந்தந்தேர்ந் தாடுபாம்பே. 99

பூசைசெய்தால் சுத்த போதம்வருமோ
பூமிவலம்செய்ததனாற் புண்ணியமுண்டோ
ஆசையற்றகாலத்திலே ஆதிவஸ்துவை
அடையலாமென்று துணிந்தாடாய்ப்பாம்பே.100

மூலவேரறிந்துகொண்டால் மூன்றுலகமும்
முன்பாகவேகண்டு நித்திய முத்திசேரலாம்
சாலவேறறிந்தாலே தான்பயனுண்டே
சகத்தைப் பொய்யென்று வெழுந்தாடாய்பாம்பே.

சகத்தினுதியென்றிடாது தானனாதியாற்
சமைந்ததென்றுரைப்பார்கள் சத்தையறியார்
மகத்துவநிலைகற்ப வன்மையல்லாது
மற்றும்வன்மையில்லையென் றாடாய்பாம்பே. 102

ஆயிரத்தெட்டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன்
அண்டமெல்லா நிறைந்திடு மற்புதசித்தன்
காயமில்லாதோங்கிவளர் காரணசித்தன்
கண்ணுளொளியானென் றூடாய்பாம்பே. 103

நாற்பத்துமுக்கோண நிலை நாப்பணதாக
நாடுமக்கரச்சொருப நாயகன்தன்னை
மேற்படுத்திக்கொண்டாலந்த மேலுலகெலா
மெல்லடிக்குத்தொண்டேயென் றூடாய்
[பாம்பே

கண்டவர்களொருக்காலும் விண்டிடார்கள்
விண்டவர்களொருக்காலும் கண்டிடார்கள்
கொண்டகோலமுள்ளவர்கள் கோனிலைகாணார்
கூத்தாடிகூத்தாடி யாடுபாம்பே. 105

ஆறுகலைக்குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அயல்வீடுபோகுமுன்னே யாண்கோலிக்கொள்
வேறுபட்டாலவனன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னேவிடாது கொண்டாடுபாம்பே. 106

எண்ணரியபுண்ணியங்க ளெல்லாஞ்செய்து
ஏகனடிநெஞ்சமதி லெண்ணுவிடிலே [மென்
பண்ணரியதவப்பயன் பத்தியில்லையேற்
பாழ்படுமென் றுதுணிந் தாடாய்பாம்பே. 107

எவ்வுலகுஞ்சொந்தமா யெய்தும்பயனென்
எங்களாதிபதாம்புய மெண்ணுக்காலையில்
இவ்வுலகவாழ்வுதானு மின்றேவருமென்
றெண்ணிக்கர்த்தனடி நினைந் தாடாய்பாம்பே.108

மனக்கோலங்கொண்டுமிக மனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்கிநின்றாய்

பிணக்கோலங்கண்டு பின்னுந்துறவாவிட்டால்
பிறப்புக்கேதுணையென் றாடாய்பாம்பே. 109

பிறப்பையுமிறப்பையு மறுத்துவிடயான்
பெருமருந்தொன்றுசொல்வேன் பெட்புடன்கே
திறப்புடன்மனப்பூட்டுஞ் சிந்தைக்கதவும் [ளாய்
திறந்திடும்வகையறிந் தாடாய்பாம்பே. 110

இறந்தவரைவரவ ரிஷ்டமானவர்
எய்துமவரிறந்தாரென் றெல்லவர்க்குஞ்சொல்
மறந்தவரொருவரென்றே மண்ணினிலுள்ளோர்
வகையறிந்திடவேநின் றாடாய்பாம்பே. 111

நான்கடிச் செய்யுள்

ஆகாரமுதலிலே பாம்பதாக
ஆனந்தவயலிலே படம்விரித்தே
ஊகாரமுதலிலே யொத்தொடுங்கி
ஓடிவகாரத்தி னுக்கைநீட்டிச்
சீகாரங்கிடந்ததோர் மந்திரத்தைச்
சித்தப்பிடாரனார் போதஞ்செய்ய
மாசாரப்பிறப்பையும் வேராறுத்து
மாயாபந்தங்கடந்தோமென் றாடாய்பாம்பே.

தந்திரஞ்சொல்லுவார் தலைமயறியார்
தனிமந்திரஞ்சொல்லுவார் பொருளறியார்
மந்திரஞ்செபிப்பார்கள் வட்டவீட்டினுள்
மதிலினைச்சுற்றுவார் வாயல்காணார்
அந்தரஞ்சென்றுமே வேர்பிடுங்கி
அருளென்னுஞானத்தாலுண்டைசேர்த்தே
இந்தமருந்தினைத் தின்பீராகில்
இனிபிறப்பில்லையென் றாடாய்பாம்பே. 113

களிமண்ணினாலொரு கப்பல்சேர்த்தே
கனமானபாய்மரங் காணநாட்டி
அளிபுலந்தன்னையே சுக்கானாக்கி
அறிவென்னுமதாரச் சீனிதூக்கி
வெளியென்னும்வட்டத்தே யுள்ளடக்கி
வேதாந்தக்கடலிலே மெள்ளவோட்டித்
தெளிவுறுஞானியா ரோட்டுங்கப்பல்
சீர்பாதஞ்சேர்ந்ததென் றாடாய்பாம்பே. 114

உள்ளத்துக்குள்ளே யுணரவேண்டும்
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்
மெள்ளக்கனலை யெழுப்பவேண்டும்
வீதிபுனலிலே செலுத்தவேண்டும்
கள்ளப்புனலைக் கடிந்துவிட்டுக்
கண்ணுக்குமூக்குமேற் காணநின்று
தென்னுபாஞ்சோதி தன்னைத்தேடிச்
சீர்பாதங்கண்டோமென் றாடாய்பாம்பே. 115

ஓங்காரக்கம்பத்தி னுச்சிமேலே
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்
ஆங்காரக்கோபத்தை யறுத்துவிட்டே
ஆனந்தவெள்ளத்தைத் தாக்கிக்கொண்டே
சாங்காலமில்லாமற் றானுவுடனே
சட்டதிட்டமாகச் சேர்ந்துசார்ந்தமாகவே
தூங்காமற்றூங்கியே சுகமடைந்து
தொந்தோம் தொந்தோமென் றாடாய்பாம்பே

விரகுடத்திலே பாய்படைப்போம்
வேதாந்தவெளியிலே விட்டாட்டுவோம்
கரணங்களைப்பிடுங்கி யிரைகொடுப்போம்
காலக்கடுவெளிநின் றாட்டுவிப்போம்

ஆரகத்தனிலேறித் தொல்லுலகெங்கும்
சுற்றிவலம்வந்து நித்திய சூட்சங்கண்டும்
உரையற்றமந்திரஞ் சொல்லிமீட்போம்
ஒருநான்குப்பெற்றோமென் றூடாய்பாம்பே.

காயக்குடத்திலே நின்றபாம்பைக்
கருணைக்கடலிலே நியங்கவிட்டு
நேயச்சுழுமுனை நீருபாய்ச்சி
நித்தியமான வஸ்துவை நிலைக்கநாடி
மாயப்பெருவெளி தன்னிலேறி
மாசற்றப்பொருளினை வாய்க்கத்தேடி
ஆயத்துறைகடந்தப் பாற்பாழின்
ஆனந்தஞ்சேர்ந்தோமென் றூடாய்பாம்பே.

மூலத்தலத்திலே நின்றகருத்தை
முற்றுஞ்சுழிமுனை தன்னினூடே
மேலத்தலத்திலே விந்துவட்டம்
மேலைவழியிலே மேவிவாழும்
பாலத்திதாயக் கருணையினால்
பரகதிஞான சொரூபமாகி
ஆலச்சயனத்துமா லுடனின்றே
ஆனந்தஞ்சேர்ந்தோர்மென் றூடாய்பாம்பே.

புலனைந்துவீதியில் வையாளியாயும்
புரவியெனுமனதை யொருமைப்படுத்தி
மலபந்தவுலகங் கடந்ததாலே
மன்னுகுருபாதத்தி னிலைநாடித்
தலைமைந்துபூலோகங் கடந்ததாலே
சந்திரமண்டலங் கடந்ததாகும்
அலம்வந்துபூலோகக் கடலைநீக்கி
ஆனந்தமாகிநின் றூடாய்பாம்பே. 120

குருவென்றுமாசா னுருவெடுத்துக்
குறியானஞானந் துப்பாக்கியாக்கி
அருளென்னுமருளே யுண்டையாக்கி
ஆனந்தமாகவே யதைக்கடந்தே
மருளென்னுமாதர்ம நெறிதொட்டு
வாங்காமலெரிந்திட நெட்டையிட்டு
பருவலைக்குளளே பட்டதென்றே
பற்றுனைப்பற்றி நின் றூடாய்பாம்பே. 121

கன்னுன்குகையிலே கான்மறிப்போம்
கருமானுலையிலே தீமூட்டுவோம்
சொன்னார்தலையிலே பொன்னுக்குவோம்
சுற்றியறுகல்வி யொப்பஞ்செய்வோம்
மின்னார்கள்பாசத்தை விட்டெரிப்போம்
மெய்ப்பொருட்குறிகண்டு விருப்படைவோம்
பன்னுதே பன்னுதே சும்மாவிரு
பராபரஞ்சேர்ந்தோ மென்றூடாய்பாம்பே. 122

சாதிப்பிரிவிலே தீமூட்டுவோம்
சந்தவெளியினிற் கோல்நாட்டுவோம்
வீதிப்பிரிவினில் விளையாடுவோம்
வேண்டாதமனையி லுறவுசெய்வோம்
சோதித்துலாவியே தூங்கிவிடுவோம்
சுகமானபெண்ணையே சுகித்திருப்போம்
ஆதிப்பிரமாக்களைந்துபேரும்
அறியார்களிதையென் றூடாய்பாம்பே. 123

நட்டெழுத்தனிலே நிலைபிடித்து
நீங்காவெழுத்திலே வாலைமுறுக்கி
விட்டவ்வெழுத்திலே படம்விரித்து
விண்ணின்வழியிலே மேவியாடிப்

பட்டவெழுத்தையும் பழித்திருப்போம்
  பன்னிரண்டாமெழுத்தினிற் பன்னிக்கூடி
திட்டமுடனெமக்கரு டேசிகனார்தம்
  சீர்பாதஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 124

ஊசித்துளைக்குடத்தினிற் பாம்படைப்போம்
  உலகெலாஞ்சுற்றி யுலாவிவருவோம்
மாசுள்ளபிறவியை மறந்திருப்போம்
  மனமொத்தவேளையிலே விட்டாட்டுவோம்
மாசுபுலன்களை யிரைகொடுப்போம்
  மனதுற்றஉச்சியி லேறியாடுவோம்
பேசுமெழுத்தை விழுங்கவிடுவோம்
  பிறப்பிறப்பற்றோமென் றாடாய்பாம்பே. 125

ஆணிகுடத்திலே பாம்படைப்போம்
  அக்கினிகோட்டைமே லேறப்பார்ப்போம்
மாணிக்கத்தூணின்மேல் விட்டாட்டுவோம்
  மனம்வாக்குகாயத்தை யிரைகொடுப்போம்
நாணிக்கயிற்றையு மறுத்துவிடுவோம்
  நமனற்றநாதன்பதம் நாடியேநிற்போம்
ஏணிப்படிவழிகண் டேறவிடுவோம்
  யாருமிதையறியாரென் றாடாய்பாம்பே. 126

வடக்குகிழக்குமாய் நூலிழைப்போம்
  மற்றுஞ்சுழலிலே யாவும்பூட்டுவோம்
நடக்கும்வழியிலே யுண்டைசேர்ப்போம்
  நடவாவழியிலே புடவைநெய்வோம்
குடக்குக்கறையிலே கோலைப்போடுவோம்
  கொய்த்தைஎங்குமே விற்றுவிடுவோம்
அடக்கியேக்கத்துள்ளே வைக்கவும்வல்லோம்
  ஆதிபதங்கண்டோமென் றாடாய்பாம்பே. 127

சூத்திரகுடத்திலே பாம்படைப்போம்
சுழுமுனைக்குள்ளே சுகித்திருப்போம்
பாத்திரங்கொண்டுமே பலியிரப்போம்
பத்தெட்டுமூன்றுபடி கடந்தோம்
மூத்தைசடலத்தினைப் புடமிடுவோம்
உள்ளவுனமக்கு நல்லுறுதிசொல்லப்
பார்த்துரையிதன்மெய் பலிக்கவெண்ணிப்
பதனம்பன்னமென் றூடாய்பாம்பே. 128

மவ்வக்குடத்திலே பாம்படைப்போம்
மணிவட்டவாசியை வாரியுண்போம்
பவ்வுக்குடங்களைத் தள்ளிவிடுவோம்
வச்சிரசொற்பனந் தாண்டிவிடுவோம்
மவ்வெளியிலே விட்டாட்டுவோம்
பஞ்சக்கருவியைப் பலிகொடுப்போம்
சிவ்வுருவாகிலையை நின்றேமென்றே
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே. 129

பாம்பாட்டி சித்தர் பாடல்

முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சகம், சென்னை-1. (1972)

# சரீர மர்மம்

ஆசிரியர்: எம். எஸ். நடேச முதலியார்

## விலை ரூபாய். 3-50.

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும், ரதி மன்மத சிங்கார ரகஸ்யங்களும், சம்சார சுகம், குடும்ப ரகசியம், மண வாழ்க்கையின் மர்மங்கள், காதலர் காதலி, சரச சல்லாப இன்பங்கள், ஆரோக்கிய சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், சிசு சம்ரக்ஷண சாஸ்திரம் முதலியவும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகாரிஷிகள் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்துக்கொள்ளும் சிறுவர் சிறுமியர்களுக்கும் இன்றியமையாத நூல். இந்நூலின் சுவையானது படிப்போரை பிரமிக்கச் செய்து முற்றிலும் படிக்காமல் கீழே வைக்க மனத் துணியாது. இதன் ஒவ்வோர் அத்தியாயமும் குடும்ப வாழ்க்கையின் குணநலனை புகட்டும்.

எமது விலாசம்:—

ஆர். ஜீ. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.

# மாயாஜால மர்மங்கள்

[நான்கு பாகங்கள் அடங்கியது]

## விலை ரூபா. 3-00.

இந்நூலில் வேண்டிய அநேக வித்தைகளும், மோடி வித்தைகளின் இரகசியங்களும், மற்றும் யாவரும் பிரமிக்கத் தக்க பல ஜாலங்கள், பல சித்துக்கள் விளையாடும் மை வகைகளும், அஞ்சன மைகளும், சிமிழ்வித்தை, சொக்குப்பொடியின் குளிகை, அஷ்டகர்ம கரு மை, மற்றும் முனிவர்கள், வாராகி, ஜாலக்காரன், குட்டிச்சாத்தான், யக்ஷணி, அநுமான், மாடன், பகவதி, இருளிகாட்டேரி வசியங்களும், அதற்கு வேண்டிய மந்திரங்களும் மற்றும் கோகர்ண சுதர்சன இந்திர மகேந்திர ஜாலங்களும், குழந்தைகளின் சகல தோஷங்களுக்கும் விபூதிபிடித்தல், வேப்பிலை அடித்தல், பேய்பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியங்களை அகற்றல், சதிபதிகள் பிரியா திருத்தல், சுடுமருந்தை முறித்தல், மற்றும் பாம்பு, தேள், நாய், பூனை, எலி இது போன்ற பல விஷஜெந்துக்களின் கடி விஷங்களை யொழித்தல், இன்னும் ஜாலக்காரின் ஜெகஜால வித்தைகள், முள்ளின்மீது படுத்தல், நெருப்பை கையிலள்ளுதல், நெருப்பு மிதித்தல், நெருப்புசட்டி ஏந்தும் ரகசியம், நெருப்பை மடியில் கட்டுதல், ஜலத்தின்மீது படுத்தல் ஜலத்திலுட்காருதல், வயிற்றில் சட்டிபாய்ச்சுதல், மோடியின் முக்கியமான வித்தைகள், வனவிலங்குகளை அடக்கி ஆளுதல், உடுக்கையை உடைத்தல், கன்றுகுட்டியின்தலை சுத்துதல், உண்ணாவிரத மிருத்தல், ஆட்டுமந்தையை மாட்டுமந்தை யாக்குதல், அந்தரமாக நிற்குதல், குளத்திலுள் சென்று லிகிதம் எழுதுதல், பந்தயம் கெலித்தல், பாளைகொம்பு பாட்டு பாடுதல், இதுபோன்ற எண்ணிலடங்காத ஏராளமான ஜால வித்தைகள் இதில் அடங்கியுள்ளது.

எமது விலாசம் :—

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.